**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 214 of 2025

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : கவிதா

Father's Name : க/பெ. வேலுமணி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th **day of September** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் செம்மாண்டம் பாளையம், சூலூர் தாலுகாவில் குடியிருந்து கொண்டு வீட்டில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 08.04.2021 ம் இரவு சுமார் 8 முதல் 08.30 மணிக்குள்ளாக, ஏற்கனவே எதிரி தென்னரசு, மதன் மற்றும் கணேஷ் ஆகியோரிடம் ரூபாய் 5 லட்சத்து 50 ஆயிரம் கடனாக வாங்கி உள்ளார். மேற்படி கடனாக வாங்கிய தொகையில் ரூ.4,50,000/- ஏற்கனவே தென்னரசு மதன் மற்றும் கணேசனிடம் திரும்ப கொடுத்துள்ளார். மீதம் தரவேண்டிய தொகை ரூபாய் ஒரு லட்சத்தை மதன் மற்றும் கணேசன் இருவரும் எதிரியிடம் கேட்டுள்ளார்கள். எதிரி மேற்படி தொகையை தருவதாக கூறி தனது வீட்டிற்கு வரச் சொல்லி உள்ளார். மேற்படி கணேஷ் மற்றும் மகன் இருவரும் எதிரில் வீட்டிற்கு சென்ற பொழுது தென்னரசு மற்றும் தென்னரசின் தந்தை இருவரும் சேர்ந்து ரூபாய் 94 ஆயிரத்து தந்துள்ளார்கள். மீதமுள்ள தொகை 6 ஆயிரத்தை எப்பொழுது தருவதாக எதிரியிடம் கேட்க உனக்கு இதுவே அதிகம்

தாயோழி என பேசி திட்டி உள்ளார்.

2. மதன் மற்றும் கணேசன் இருவருக்கும் தாய் மற்றும் தந்தை கிடையாது. ஆகவே எனது கணவருக்கு போன் செய்து மேற்படி விபரத்தைச் சொல்லி உள்ளார்கள். அப்பொழுது மதன் மற்றும் கணேசன் இருவரும் என்னுடைய பெரியப்பா சிகாமணி அவர்கள் வீட்டின் முன்பாக இருந்து கொண்டு தகவல் சொன்னார்கள். என்னுடைய கணவர் மற்றும் நான் இருவரும் என்னவென்று கேட்க சிகாமணி பெரியப்பா வீட்டிற்கு முன்பாக சென்ற பொழுது பரத் இருசக்கர வாகனத்தில் முதலில் வந்தார். அவரிடம் பேசுவதற்குள் எதிரி தென்னரசமும் இருசக்கர வாகனத்தில் அங்கு வந்தார். பரத் வந்தவுடன் எனது கணவரை கீழே பிடித்து தள்ளி விட்டார். பின்னர் எதிரி தென்னரசு வந்து பெரிய இரும்பு ராடால் எனது கணவரின் முன் தலையில் அடித்துவிட்டார். அதை பார்த்து தடுக்க வந்த நசீர் என்ற ஓட்டுநரையும் எதிரி தென்னரசு தலையின் பின் மண்டையில் அடித்து விட்டார். பின்னர் தலையில் ரத்தம் வழிந்து கொண்டே காவல் நிலையம் சென்று புகார் அளித்த பொழுது போலீசார் மருத்துவமனை செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். அங்கிருந்து நாங்கள் மருத்துவமனை சென்றோம்.

அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி கேட்டுக் கொண்டதன் பேரில், அனுமதி அளிக்கப்படுகிறது.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.09.15 19:27:04 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**